**செய்தி வெளியீடு எண்: 050** **நாள் : 21.01.2016**

## செய்திக்குறிப்பு

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ஆண்டுதோறும் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இந்த ஆண்டு (2015–16) சென்னை மாவட்ட அளவிலான கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் கல்லூரி மாணவர்களுக்கு 27.01.2016 ஆம் நாளன்றும், 11, 12 ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் 28.01.2016 ஆம் நாளன்றும் சென்னை, காயிதே மில்லத் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் தனித்தனியே காலை 9.00 மணி முதல் நடைபெற உள்ளன.

கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெறும் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/–மும், இரண்டாம் பரிசாக ரூ.7000/–மும் சான்றிதழும் வழங்கப்படும்.

போட்டிக்கான தலைப்புகள் போட்டி தொடங்குவதற்கு முன் அறிவிக்கப்பெறும். போட்டி முடிவுகள் அன்றே அறிவிக்கப்பெறும். போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் போட்டி நடைபெறும் நாளன்று கல்லூரி, பள்ளிகளில் உரிய படிவத்தில் பரிந்துரைக் கடிதம் பெற்று வரவேண்டும்.

தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் (பொ)
சென்னை மாவட்டம்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**